# மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
**(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)**




முனைவர் வெ. சின்னையா, எம்.காம்., எம்.பில்., பி.எல்., பி.எச்.டி.,
பதிவாளர்

பல்கலைநகர்
மதுரை-625 021


எண்.ம.கா.ப./பாடத்திட்டப்பிரிவு/இளநிலை தமிழ்/2018 29.08.2018

பெறுநா்

அனைத்துக் கல்லூரி முதல்வர்கள், (இளநிலை தமிழ் பட்டப்படிப்பு நடத்தும் - தன்னாட்சி அல்லாத பல்கலைக்கழக இணைவிப்புக் கல்லூரிகள்), மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

ஐயா / அம்மா,

பார்வை : **Revised Syllabus for B.A. Tamil as approved by Academic Council dt. 26.03.2018 Vide Appendix – AD (Page No.876 to 898)**

""

இப்பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த 13.08.2018 அன்று நடைபெற்ற இளநிலை தமிழ் பாடத்திட்டக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாற்றங்களை 2018-2019 கல்வியாண்டு முதல் தவறாது நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இது குறித்து சம்பந்தப்பட்ட தங்கள் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர்களுக்கு உடனடியாக தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## இளநிலைத்தமிழ் இலக்கியம் (பி.ஏ. தமிழ்) பட்டவகுப்பு பகுதி-3
## பொது விருப்பப்பாடத்தேர்வு முறைப்பாட அமைப்புகள் (CBCS)

முதலாமாண்டு முதற்பருவத்தில் தமிழ் இலக்கியம் (**Major** - தமிழ்) முதன்மைப்பாடத்தில் இடம்பெற்றுள்ள தாள்-1 இக்காலஇலக்கியம் என்ற தாளில் கூறு-2ல் இடம் பெற்றுள்ள "இலக்கிய வரைவு (ஆசிரியர் முனைவர் மு.மணிவேல்) என்ற நூலில் இடம்பெற்றுள்ள 14 கட்டுரைகளில் மாணவர்கள் நலன் கருதி கீழ்கண்ட ஏழு (7) கட்டுரைகள் மட்டுமே பாடத்தில் இடம் பெறச்செய்து இந்தாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

1. மு. வரதராசனாரின் இலக்கிய ஆளுமை
2. பட்டுக்கோட்டையாரின் பாட்டுத்திறம்
3. பாரதியின் காதலும் காதல் பாடல்களும்
4. இரசூல் மாலை என்னும் புகழ்மாலை
5. முதுமொழிக்காஞ்சி கூறும் அறங்கள்
6. சங்கப்பாடல்களில் கதைக் கூறுகள்
7. சங்க அகப்பாடல்களில் தலைவன் தலைவியர்

### தமிழ் இலக்கியப்பாடத்தில் (**Major** - தமிழ்)

புதிய பாடத்திட்டத்தின் படி ஐந்தாம் பருவத்தில் ஐந்து முதன்மைப்பாடங்கள் இடம்பெற்றுள்ளன. அதில் தாள்-20 இக்கால மொழியியல் என்ற முதன்மைப்பாடம் நீக்கப்படுகிறது.

தாள் 17. சிற்றிலக்கியம்
தாள் 18. பொருள் இலக்கணம் (அகம் நம்பியகப்பொருள்)
தாள் 19. தமிழ் மொழி வரலாறும் இலக்கண வரலாறும்
தாள் 20. இலக்கியத் திறனாய்வியல்

என்று வரையறுக்கப்படுகின்றது. தாள்-21ல் இடம்பெற்றிருந்த இலக்கியத் திறனாய்வியல் தாள்-20 என அடுத்தடுத்து வரிசைப்படுத்தப்பட்டு மொத்தம் 31 தாள்களாக வைக்கப்பட்டுள்ளது,

இக்கால மொழியியலை நீக்குவதற்குக் காரணம் தமிழ் மொழி வரலாறு என்ற பாடம் படிக்கின்ற காரணத்தினால் நீக்கப்படுகின்றது. முறையே ஐந்தாம் பருவத்திற்கு (**V Semester**) 4 முதன்மைப்பாடங்கள் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பின்வருமாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

<u>முதற்பருவம்</u>

| | | |
|---|---|---|
| தாள் | 1. | இக்கால இலக்கியம் (கவிதையும் - கதை இலக்கியமும் - முதன்மைப்பாடம் |
| தாள் | 2. | இலக்கணம் (எழுத்து) |
| தாள் | 3. | தமிழக வரலாறும் பண்பாடும் -**I** (துணைப்பாடம்) |
| தாள் | 4. | தமிழ் இலக்கிய வரலாறு தாள் -**I** (பிறதுறை மாணவர்களுக்கான விருப்பப் பாடம்) **N.M.E.-1** |

**(P.T.O.)**

## இரண்டாம் பருவம்

| | | |
|---|---|---|
| தாள் | 5. | அற இலக்கியம் - முதன்மைப்பாடம் |
| தாள் | 6. | இலக்கணம் நன்னூல் (சொல்) |
| தாள் | 7. | தமிழக வரலாறும் பண்பாடும் -II (துணைப்பாடம்) |
| தாள் | 8. | தமிழ் இலக்கிய வரலாறு தாள் -II (பிறதுறை மாணவர்களுக்கான விருப்பப் பாடம்) **N.M.E.-2.** |

## மூன்றாம் பருவம்

| | | |
|---|---|---|
| தாள் | 9. | பக்தி இலக்கியம் - முதன்மைப்பாடம் |
| தாள் | 10. | இலக்கணம் (யாப்பு)- முதன்மைப்பாடம் |
| தாள் | 11. | மக்கள் தகவல் தொடர்பியல் அறிமுகம் (துணைப்பாடம்) |
| தாள் | 12. | மொழி பெயர்ப்பியல் (திறன் வளர் அடிப்படைப்பாடம்) **Skill Based Subjects** |

## நான்காம் பருவம்

| | | |
|---|---|---|
| தாள் | 13. | காப்பிய இலக்கியம் - முதன்மைப்பாடம் |
| தாள் | 14. | பொருள் இலக்கணம் (அணி) - முதன்மைப்பாடம் |
| தாள் | 15. | நாட்டுப்புறவியல் (துணைப்பாடம்) |
| தாள் | 16. | அறிவியல் தமிழ் (திறன் வளர் அடிப்படைப்பாடம்) **Skill Based Subjects** |

## ஐந்தாம் பருவம்

| | | |
|---|---|---|
| தாள் | 17. | சிற்றிலக்கியம் - முதன்மைப்பாடம் |
| தாள் | 18. | பொருள் இலக்கணம் (அகம் - நம்பியகப்பொருள்) - முதன்மைப்பாடம் |
| தாள் | 19. | தமிழ் மொழி வரலாறும் இலக்கண வரலாறும் |
| தாள் | 20. | இலக்கியத் திறனாய்வியல் - முதன்மைப்பாடம் |
| தாள் | 21. | கவின் கலைகள் அல்லது கல்வெட்டியல் (விருப்பப்பாடம்) |
| தாள் | 22. | சுற்றுச்சூழல் இயல் (**Environmental Studies)** |
| தாள் | 23. | ஆளுமைத்திறன் (திறன் வளர் அடிப்படைப்பாடம்) **Skill Based Subjects** |

## ஆறாம் பருவம்

| | | |
|---|---|---|
| தாள் | 24. | சங்க இலக்கியம் - முதன்மைப்பாடம் |
| தாள் | 25. | பொருள் இலக்கணம் (புறம் - புறப்பொருள் வெண்பா மாலை) – முதன்மைப்பாடம் |
| தாள் | 26. | சுற்றுலாவியல் அல்லது தமிழகக் கோயில் கலைகள் (விருப்பப்பாடம்) |
| தாள் | 27. | இதழியல் கலை அல்லது போட்டித் தமிழ் (விருப்பப்பாடம்) |
| தாள் | 28. | பேச்சுக்கலை (திறன் வளர் அடிப்படைப்பாடம்) **Skill Based Subjects** |
| தாள் | 29. | மொழிப்பயன்பாடு (திறன் வளர் அடிப்படைப்பாடம்) **Skill Based Subjects** |
| தாள் | 30. | திரைப்படக் கலையும் விமர்சனமும் (திறன் வளர் அடிப்படைப்பாடம்) **Skill Based Subjects** |
| தாள் | 31. | மதிப்புக்கல்வி (**Value Education)** |

பதிவாளர்

**Copy to**

1. தேர்வாணையர்
2. முதுநிலை துணைப்பதிவாளர் அரணறை
3. துணைப்பதிவாளர் இளநிலைப்பிரிவுகள்
4. கண்காணிப்பாளர் பி.ஏ. பருவமுறைப்பிரிவு
5. கண்காணிப்பாளர் பி.எஸ்.ஸி. பருவமுறைப்பிரிவு
6. உதவிப்பதிவாளர் கமுக்கப்பிரிவு மற்றும்
7. கண்காணிப்பாளர் கமுக்கப்பிரிவு

# மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
## (ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)

முனைவர் வெ. சின்னையா, எம்.காம்., எம்.பில்., பி.எல்., பி.எச்.டி.,
பதிவாளர்

பல்கலைநகர்
மதுரை-625 021


எண்.ம.கா.ப./பாடத்திட்டப்பிரிவு/இளநிலை தமிழ்/2018 14.09.2018

பெறுநர்

அனைத்துக் கல்லூரி முதல்வர்கள், (தன்னாட்சி அல்லாத பல்கலைக்கழக இணைவிப்புக் கல்லூரிகள்), மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

ஐயா/ அம்மா,

பார்வை :

1. **Minutes of the meeting of the Chairperson of Boards of Studies in Tamil (UG) dt. 13.08.2018**
2. எண்.ம.கா.ப./பாடத்திட்டப்பிரிவு/இளநிலை தமிழ்/2018 நாள் 29.08.2018
3. **B-1/BoS/UG/Syllabus/Part-IV/2018 dt. 19.06.2018**
4. **Syndicate Resolution dated 04.06.2018**

*******

இப்பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த 13.08.2018 அன்று நடைபெற்ற இளநிலை தமிழ் பாடத்திட்டக்குழுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி பார்வை-2-இல் குறிப்பிட்டுள்ள இவ்வலுவலக கடிதத்தில் **Part-IV**-இன் கீழ் வரும் பாடங்கள் **[NMEs, Value Education and Environmental Studies)** மட்டும் பருவவரிசை மாற்றிக்குறிப்பிடப்பட்டுள்ளதால் ஆட்சிக்குழுத்தீர்மானத்தின் படி (04.06.2018) இவ்வலுவலகத்தால் அனுப்பப்பட்ட 19.06.2018 நாளிட்டக் கடிதத்தை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

எனவே இதனை சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கும் அலுவலர்களுக்கும் மாணவ மாணவியர்க்கும் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெ. சின்னையா 14/9/2018
பதிவாளர்

**Copy to**

1. தேர்வாணையர்
2. முதுநிலை துணைப்பதிவாளர் அரணறை
3. துணைப்பதிவாளர் இளநிலைப்பிரிவுகள்
4. கண்காணிப்பாளர் பி.ஏ. பருவமுறைப்பிரிவு
5. கண்காணிப்பாளர் பி.எஸ்.ஸி. பருவமுறைப்பிரிவு
6. உதவிப்பதிவாளர் கமுக்கப்பிரிவு மற்றும்
7. கண்காணிப்பாளர் கமுக்கப்பிரிவு


**Phone Off: 0452 – 245 9455, Fax: 0452 – 245 9181, www.mkuniversity.org, Email: mkuregistrar@gmail.com, mkuregistrar@rediffmail.com**

# மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

**(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)**



முனைவர் வெ. சின்னையா, எம்.காம்., எம்.பில்., பி.எல்., பி.எச்.டி.,
பதிவாளர்

பல்கலைநகர்
மதுரை-625 021

எண்.ம.கா.ப./பாடத்திட்டப்பிரிவு/இளநிலை தமிழ்/2018 28.09.2018

பெறுநர்

அனைத்துக் கல்லூரி முதல்வர்கள், (தன்னாட்சி அல்லாத பல்கலைக்கழக இணைவிப்புக் கல்லூரிகள்), மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

ஐயா / அம்மா,

பார்வை : **1.** பாடத்திட்டக்குழுத்தலைவர் தமிழ் (இளநிலை) அவர்களின் 25.09.2018 நாளிட்ட கடிதம்

*******

பார்வை எண். 1-ல் கண்டுள்ள கடிதத்தின் படி இளங்கலை தமிழ் பாடத்திட்டத்தில் பகுதி நான்கில் (**Part-IV**) துறை சாரா மாணவர்களுக்கான விருப்பப்பாடம் (**Non-Major Elective)** பிரிவில் அடிப்படைத்தமிழ் மற்றும் சிறப்புத்தமிழ் ஆகிய இரண்டிற்கும் 2008-2009 கல்வியாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட பாடத்திட்டத்தையே தற்பொழுதும் (2018-2019 கல்வியாண்டு முதல்) பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் அடிப்படைத்தமிழானது இதுவரை தமிழ்மொழி பயின்றிராத, தற்பொழுது பகுதி-**I (Part-I)** இல் தமிழ் பயிலாத மாணவர்களுக்கு அளிக்கப்படவேண்டும் எனவும், சிறப்புத்தமிழானது பள்ளியில் தமிழ்மொழி பயின்று கல்லூரியில் பகுதி-**I (Part-I)** இல் தமிழ் பயிலாத மாணவர்களுக்கு அளிக்கப்படவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்படுகிறது

எனவே இதனை சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கும் அலுவலர்களுக்கும் மாணவ மாணவியர்க்கும் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பதிவாளர்

இணைப்பு : பாடத்திட்ட நகல்

நகல் பார்வைக்கு

1. தேர்வாணையர்
2. முதுநிலை துணைப்பதிவாளர் அரணறை
3. துணைப்பதிவாளர் இளநிலைப்பிரிவுகள்
4. கண்காணிப்பாளர் பி.ஏ. பருவமுறைப்பிரிவு
5. கண்காணிப்பாளர் பி.எஸ்.ஸி. பருவமுறைப்பிரிவு
6. உதவிப்பதிவாளர் கழுக்கப்பிரிவு மற்றும்
7. கண்காணிப்பாளர் கழுக்கப்பிரிவு